RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ ijmrd2323

# Maslow's Hierarchy of Needs in Ponnagaram

## மாஸ்லோவின் படிநிலைத் தேவைக் கோட்பாட்டு நோக்கில் பொன்னகரம்

**A. Godwin Sudharsan [a,*], S. Ravi [a]**

[a] Department of Tamil, School of Social Sciences & humanities, Central University of Tamil Nadu, Neelakudi, Thiruvarur-610005, Tamil Nadu, India.

*Corresponding author Email: virugodwin3@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2323

Received: 19-04-2023; Revised: 02-06-2023; Accepted: 10-06-2023; Published: 30-06-2023

**Abstract:** Maslow's Hierarchy of Needs Theory helps in understanding the literature. Good authors tell stories that are realistic because their characters are based on real life people who develop as Maslow observed. This leads to research in the literature and particularly a short story, which is one of the literary genres written with some characters based on a specific theme, is taken as the field of study. It can be known that Pudhumaipithan is a writer who creates characters based on real life as his stories are only 'Sketches' that are metaphors about life. One of his short stories, "Ponnagaram" is taken for the study as it reflects the life of the commons. Thus, based on the hypothesis this paper compares and examines the elements of the pyramidal hierarchy of needs as Pudhumaipithan's "Ponnagaram" is compatible with Maslow's Hierarchy of Needs theory.

**Keywords:** Pudhumaipithan, Ponnagaram, Maslow, Hierarchy

**Language:** **Tamil**

## முன்னுரை

ஆபிரஹாம் ஹார்லோட் மாஸ்லோ (Abraham Harlod Maslow) அமெரிக்க உளவியலாளர்களுள் ஒருவர்.இவர் பிரண்டீஸ் பல்கலைக்கழகம், ப்ரூக்லைன் கல்லூரி, நியூ ஸ்கூல் பார் சோசியல் ரிசர்ச், கொலம்பியா பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் உளவியல் சார்ந்து பணியாற்றியுள்ளார். 1908 தொடக்கமாய் 1970க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மாஸ்லோ இரண்டாம் உலகப்போர் இருத்தலியலாளர்களாலும், அக்காலத்திய இலக்கிய ஆளுமைகளாலும் ஈர்க்கப்பட்டதால் மனித நேய உளவியலுக்கு (Humanistic Psychology) முக்கியப் பங்காற்றியுள்ளார். "A theory of Human Motivation" (1943), "Motivation and Personality" (1954,1970,1987), Toward a Psychology of Being (1962), Religions, Values and Peak Experiences" (1964), The Further Rearches of Human nature" (1971) முதலியன இவரது குறிப்பிடத்தக்கப் படைப்புகளாகும். Review of General Psychology Survey -2002ல் வெளியிட்ட அறிக்கையில் இருபதாம் நூற்றாண்டில் அதிக மேற்கோள்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட உளவியலாளர்களுள் ஒருவராய் மாஸ்லோ மதிப்பிடப்படுகிறார் (Maslow, 1943). உளப்பகுப்பாய்வு, நடத்தைவாதம் போன்ற சிந்தனைப் பள்ளிகள் மக்களது நடத்தை மற்றும் சிந்தனைகளில் கவனம் செலுத்திய நிலையில், மாஸ்லோ மக்களை மகிழ்ச்சியடையச் செய்வது எது? அந்த இலக்கினை அடைய அவர்கள் என்ன செய்கிறார்கள்? என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார். இதன் விளைவாக உருவானதே மனிதனது தேவைகளே அவனது செயல்களை நிர்ணயிக்கின்றன என்ற படிநிலைத் தேவைக் கோட்பாடாகும். இக்கோட்பாடானது உளவியல், கல்வியியல், வணிகம் போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படும் முக்கியக் கோட்பாடாக உள்ளது. இலக்கியத்தைப் புரிந்து கொள்ள உதவும் உளவியல் கோட்பாடுகளுள் ஒன்றாக மதிக்க பெறும் இதனை இலக்கியத்தில் பொருத்தி ஆராய்வது அவசியம்.

சமூகத்தின் விளைபொருளே, இலக்கியம். சமூகத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு அதனுடன் கற்பனையைச் சேர்த்து படைப்பதை இலக்கியம் என்பர். சுருங்கச் சொல்லுதலை விரும்பும் இக்காலத்திய வாழ்க்கையில் சிறுகதை இலக்கிய வகைமை நாட்டமிக்க

ஒன்றாக அறியப்படுகிறது. சிறுகதையின் கரு ஓர் எல்லைக்குள் கட்டுப்பட்டது, குறிப்பிட்ட நேரத்தில் படித்து குறிப்பிட்ட ஒன்றை அறியச் செய்யும் தன்மை கொண்டது. வல்லிக்கண்ணன், "தமிழ் சிறுகதைத் துறையில் பெரியதொரு புரட்சியை உருவாக்கியவர் புதுமைப்பித்தன்" என்று சுட்டுவார் (Vallikkannan, 2012). இவரது கதைகளுள் எளிய மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக 'பொன்னகரம்' சிறுகதை அமைகிறது.

இச்சிறுகதை இலக்கியமான பொன்னகரம், மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டுடன் பொருந்தி அமையும் என்ற கருதுகோளின் அடிப்படையில் உடலியல், பாதுகாப்பு, அன்பு, மதிப்பு, தன்னிறைவு என்ற தேவைப் படிநிலைக் கூறுகளுடன் ஒப்பிட்டு ஆராய விழைகிறது, இக்கட்டுரை.

## மாஸ்லோவின் படிநிலைத் தேவைக் கோட்பாடு

மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் காரணங்களைக் கண்டறிய முற்படும் உளவியலாளர்கள் அச்செயலின் மீதான உந்துதலுக்கு பல்வேறு கோட்பாடுகளை முன்மொழிந்துள்ளனர். இவற்றுள் மனிதனது தேவைகளே அவனது செயல்களை நிர்ணயிக்கின்றன என்பதை அடிப்படையாகக் கொண்ட மாஸ்லோவின் 'படிநிலைத் தேவைக் கோட்பாடு' முக்கியமானதாகும். இதனை வலியுறுத்துவதாய் "உந்துதல் கோட்பாட்டில் மிகவும் அறியப்படும் கோட்பாடு ஆபிரகாம் மாஸ்லோவின் படிநிலைத் தேவைக் கோட்பாடு"(2022) என்ற கேந்திரா செர்ரியின் கூற்றமைகிறது. மேலும் "இக்கோட்பாடானது, ஜேம்ஸ் மற்றும் டேவியின் 'Functionalist Tradition', வெர்தைமெர், கோல்ட்ஸ்டைன் ஆகியோரின் 'Holism', கெஸ்டால்டின் 'Psychology', பிராய்ட் மற்றும் ஆல்டரின் 'Dynamicism' ஆகியனவற்றின் ஒருங்கிணைப்பு அல்லது முழுமையான கோட்பாடு" என்ற கருத்து இதன் சிறப்பினை உணர்த்தி நிற்கிறது (Maslow, 1943).

ஆபிரகாம் மாஸ்லோ 1943-ல் "A Theory of Human Motivation" என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் 'படிநிலைத் தேவைக் கோட்பாட்டினை' அறிமுகப்படுத்துகிறார். இதன் நீட்சியாக "Motivation and Personality" (1954) என்ற தனது புத்தகத்தில் விரிவாக விளக்கியுள்ளார் (Maslow, 1943; Maslow, 1954). மக்கள் தங்கள் அடையாளத்தையும் மனித நேயத்தையும் எவ்வாறு வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதில் அக்கறை கொண்டிருந்த மாஸ்லோ, மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதன் வழி தங்கள் அடையாளத்தை வளர்த்துக் கொள்கின்றனர் என்ற கருத்துடையவராக இருந்தார். மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உந்தப்படுகிறான் என்பது இக்கோட்பாட்டின் அடிப்படையாக அமைகிறது.

படிநிலைத் தேவைக் கோட்பாடானது அடிப்படை மனித தேவைகளுக்கும் உந்துதலுக்கும் இடையேயான தொடர்பை விளக்கும் ஓர் ஊக்கமளிக்கும் கோட்பாடாகும். இது அடிப்படையில் இருந்து உச்சத்திற்குச் செல்லும் ஐந்தடுக்குப் பிரமீடு வடிவத்தில் ஒரு படிநிலை வளர்ச்சியைக் குறித்ததாய் அமைகிறது. அடிப்படைத் தேவைகள் என்று வரையறை செய்யப்படுபவை பிரமீடின் அடிப்பகுதியிலும் மேம்பட்ட தேவைகள் என்று வரையறை செய்யப்படுபவை பிரமீடின் உச்சத்திலும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மனிதனின் தேவைகளும் அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கிச் செல்ல வேண்டும் என்பதுவும், உயர்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் படிநிலைகளில் கீழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உந்தப்படுகிறான் என்பதும் இக்கோட்பாட்டின் முக்கியக் கருத்தாக அமைகிறது.

## உடலியல் தேவைகள்

மாஸ்லோவின் கருத்துப்படி உடலியல் தேவைகளே தேவைகளின் தொடக்கமாக அமைகிறது. மனிதன் உயிர் வாழ்வதற்குரிய அடிப்படைத் தேவைகள் இதில் இடம்பெறுகின்றன. காற்று, உணவு, நீர், தூக்கம், வெப்பநிலை, அரவணைப்பு, உடலுறவு போன்றவற்றை உள்ளடக்கிய இவ்வுடலியல் தேவைகள் மனிதனது தேவைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. "ஹோமியோஸ்டாஸிஸ் எனப்படும் உடலின் இயல்பான நிலையினைப் பராமரிக்கும் தானியங்கி முயற்சிகளும் உடலியல் தேவைகளாகவே கொள்ளப்படுகின்றன" (Maslow, 1943). இத்தகைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மனித உடல் இயல்பாக செயல்பட முடியாது. இத்தேவைகள் நிறைவேறும் வரை மற்ற தேவைகள் ஏதும் எழுவதில்லை என்பது மாஸ்லோவின் கணிப்பாக இருந்தது. மேலும் “அவரவர்களின்

விருப்பத்தின் அடிப்படையில் அமையும் அடிப்படை உடலியல் தேவைக்கான பட்டியலை உருவாக்குவது சாத்தியமற்றது" என்ற சிக்கலையும் மாஸ்லோ எடுத்துரைக்கத் தவறவில்லை (Maslow, 1943).

## பாதுகாப்புத் தேவைகள்

உடலியல் தேவைகள் ஒப்பீட்டளவில் நன்கு பூர்த்தி செய்யப்பட்ட பின் அடுத்த படிநிலையாய் ஒரு புதிய தேவைகளின் தொகுப்பு உருவாகிறது. இவற்றை மாஸ்லோ பாதுகாப்புத் தேவைகள் என்று வகைப்படுத்துகிறார். உடலியல் தேவைகளைத் தொடர்ந்து உயிர் வாழ்வதற்குப் பாதுகாப்பான சூழலை அமைத்துக் கொள்வது மனிதனுக்கு அவசியமான தேவையாகிறது. தனிநபரின் பாதுகாப்பினை முக்கியமானதாகக் கருதும் மாஸ்லோ பாதுகாப்பு என்பதை உடல்சார் பாதுகாப்பு (Physical Safety) மற்றும் பொருள்சார் பாதுகாப்பு (Financial Safety) என்பதாய் வகைப்படுத்துகிறார். உறைவிடம், உடை, உடல்நலம், விபத்து மற்றும் காயங்களுக்கான நிவாரணங்கள், வேலை, மருத்துவக் காப்பீடு, வங்கிக் கணக்கு, பாதுகாப்பான சுற்றுச்சூழல் முதலியன இத்தேவைக்கான கூறுகளாகக் காட்டப்படுகிறது. "சில சமயங்களில் உடலியல் தேவைகளை விடவும் பாதுகாப்புத் தேவைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது" (Maslow, 1943). உதாரணமாக, முற்றிலும் நிராகரிக்கப்பட்ட குழந்தையிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் பெற்றோர் மீதான ஏக்கம், அன்பினை விட பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அன்புத் தேவைகள்

படிநிலைத் தேவைக் கோட்பாட்டில் இது மூன்றாவது நிலையாகும். ஒரு தனி மனிதனின் உடலியல் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து எழும் தேவைகளாக அன்பு தேவைகள் உள்ளன. இது மனிதன் மற்றவர்களுடன் இணைந்து வாழ்வதற்கான தேவையாக அமைகிறது. தேவைக் கோட்பாட்டினை ஆங்கில இலக்கியத்தில் பொறுத்தி ஆராய்ந்துள்ள இராபர்ட் ஸ்வீட்லேண்ட் இம்மூன்றாம் படிநிலையை 'Need to Love, Need to belong' என்ற இரண்டாய் விளக்குவார். எல்லா மனிதர்களும் அன்பு செலுத்தவும், செலுத்தப்படவும் விரும்புகிறார்கள். இத்தேவைகளை அடிப்படையாகக் கொண்டே மனிதன் குழுக்களாகவும் குடும்பங்களாகவும் இணைந்து வாழ்கிறான். நட்பு, காதல் இணைப்பு, உறவு, பாசத்தை பெறுதல் மற்றும் கொடுத்தல், சமய அமைப்புகள், சமய குழுக்கள் முதலியனவற்றை இப்படிநிலைத் தேவைக்குள் அடக்குவார்.

மனித நடத்தையானது உணர்ச்சிகளால் இயக்கப்படுகிறது. உணர்ச்சி ரீதியான உறவுகளை உருவாக்குவது, மனிதனுக்கு முக்கியத் தேவைகளுள் ஒன்றாக அமைகிறது. இப்படியான அன்புத் தேவைகளே ஒரு நபர் இழக்கும் போதோ அல்லது நிராகரிக்கும் போதோ அவன் தனிமையையும் மனச்சோர்வையும் அடைகிறான்.

## மதிப்புத் தேவைகள்

படிநிலைகளுள் நான்காவதான மதிப்புத் தேவைகள் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபரின் தேவையுடன் தொடர்புடையது. மதிப்புத் தேவையினை விளக்க முற்படும் ஐ.எல்எம்.மாஹிர் "இது மனிதனின் சமூக இருப்பு அல்லது இணைவினை அடிப்படையாகக் கொண்டதாகும்" என்பார் (Mahir, 2018). முதல் மூன்று தேவைநிலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் மனிதனின் செயல்களை நிர்ணயிப்பதில் மதிப்புத் தேவைகள் முக்கியப் பங்காற்றுகின்றன என்று மாஸ்லோ கருதுகிறார். இம்மதிப்புத் தேவைகள் சுயமதிப்புத் தேவை, பிறரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் மதிப்புத் தேவை என்று இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. உடல் வலிமை, போதுமைத்தன்மை, உலகினை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை, சுயமரியாதை, சுய தேர்ச்சி, சுதந்திரம் முதலியன சுயமதிப்புத் தேவைகளாகவும், நற்பெயர், சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கப்படல், உடைமை, புகழ், அங்கீகாரம் முதலியன பிறரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மதிப்புத் தேவைகளாகவும் கொள்ளப்படுகின்றன.

## தன்னிறைவுத் தேவைகள்

தன்னிறைவுத் தேவையானது பிரமீடின் உச்சத்தில் அமைந்த தேவைகளின் மிக உயர்ந்த நிலையாகும். மாஸ்லோ "மனிதன் முழுத்திறனையும் பயன்படுத்தி எதை அடைய முடியுமோ, எவ்வாறு இருக்க முடியுமோ அதுவே அவனுக்கான தன்னிறைவு" என்பதாய் விளக்குவார் (Maslow, 1943). தனி ஒருவன் தனக்கு விருப்பமானதைத் தன்னுடைய திறன்களின் வழி அடைவதைக் குறிக்கும் இத்தேவையானது, தனது முழுத்திறனை உணர்தல், சுயநிறைவினை அடைதல் போன்ற காரணிகளின் வழி பூர்த்தி செய்யப்படுகிறது. மேலும், மனிதன் தனக்கு பொருத்தமானதைச் செய்வதன் வழி தன்னிறைவடைகிறான் என்ற மாஸ்லோவின் கருத்தின் மூலம் தன்னிறைவுத் தேவையானது ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டதாய் அமையும் என்பதை அறிய முடிகிறது. "மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதால் தன்னிறைவினை அடைவதற்கான உந்துதல் ஒருவருக்கொருவர் மாறுபட்டதாக அமைகிறது" என்ற கென்ரிக் என்பவரின் கருத்து இதனை உறுதிசெய்கிறது (Kenrick et al., 2010).

இதனை ஒத்ததாய், "தன்னிறைவானது, கல்வி, பொருளாதாரம், தடகளம், ஓவியம் என்று துறைகள் துறைகளாய் மாறலாம்" என்ற கேந்திரா செர்ரியின் கருத்தின் வழி ஒருவர் ஒவ்வொரு துறையிலும் தன்னிறைவடைகிறான் என்பதைப் பெறமுடிகிறது (Kendra Cherry, 2022). இதன் நீட்சியாய், இருவேறு துறைகளில் ஆர்வமுடைய ஒருவருக்கு இருவேறு தன்னிறைவுத் தேவைகள் இருப்பதை அறிய முடிகிறது. காட்டாக, கல்வியிலும் தடகளத்திலும் ஆர்வமுள்ள ஒருவன் கல்வியில் முதலிடம் பெறுதல் ஒரு தன்னிறைவாகவும் தடகளத்தில் முதலிடம் பெறுதல் மற்றுமொரு தன்னிறைவாகவும் அமைவது நோக்கத்தக்கது.

## படிநிலைத் தேவைக் கோட்பாட்டின் முக்கியத்துவம்

தேவைகள் ஒரு குறிப்பிட்ட படிநிலை வளர்ச்சியினைப் பின்பற்றுவதில்லை, தன்னிறைவுத் தேவைக் கோட்பாட்டினை அறிவியல் முறைப்படி சோதிப்பது கடினம் போன்ற குறைகளையுடையதாய் படிநிலைத் தேவைக் கோட்பாட்டின்மீது விமர்சனங்கள் எழுகின்றன. எனினும், இக்கோட்பாடு, அனைத்தையும் இழந்து நிற்கும் அகதிகள் முகாமில் அறிவுறுத்தப்படும் முக்கியமான உளவியல் கோட்பாடாகும். மேலும், வணிகத் துறை சார்ந்த படிப்புகளில் மக்கள் குழுக்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர் என்பதை அறிவதற்கும், கல்வியல் துறையில் மாணவர்களின் உளவியல் அடிப்படையில் எவ்வாறு பாடம் புகட்ட வேண்டும் என்பதற்கான வழிகாட்டியாகவும், கிறித்துவத்தில் 'நமது அழைத்தலைக் கண்டறிதலும் புதுப்பித்தலும்' எனும் நிலையில் தன்னையே அறிதலுக்கான கோட்பாடாகவும் இது பயன்படுகிறது.

## பொன்னகரமும் படிநிலைத் தேவைக் கோட்பாடும்

"மாஸ்லோவின் படிநிலைத் தேவைக் கோட்பாடானது இலக்கியத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நல்ல எழுத்தாளர் நம்பத்தகுந்த யதார்த்தமான கதையைச் சொல்லிச் செல்கிறார். அவர் உருவாக்கும் கதாபாத்திரங்கள் நிஜ வாழ்க்கையை அடிப்படையாக கொண்டவர்கள். அவர்கள் மாஸ்லோவின் கோட்பாட்டுக்கு ஒத்தமைந்தவர்களாக இருப்பர்" என்ற இராபர்ட் ஸ்வீட்லேண்டின் கருத்து இக்கோட்பாட்டினை இலக்கியத்தில் பொருத்தி ஆராய்வதற்கு வழிகோலுவதாக அமைந்துள்ளது.

இதன் அடிப்படியில் ஒரு குறிப்பிட்ட கருவை அடிப்படையாகக் கொண்டு, சில கதாபாத்திரங்களை வைத்து எழுதப்பெறும் இலக்கிய வகைமைகளுள் ஒன்றான சிறுகதையை ஆய்வுக்குரிய களமாகக் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவற்றுள் 'புதுமைப்பித்தனின் கதைகளில் அநேகம் கதைகளே இல்லை. வெறும் ஸ்கெட்ச்சஸ் (Sketches) வாழ்க்கை பற்றிய சொற்சித்திரங்கள்தான்', என்பதன்வழி நிஜ வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கதாபாத்திரங்கள் உருவாக்கும் எழுத்தாளர் புதுமைப்பித்தன் என்பதை அறியமுடிகிறது. இவரது கதைகளுள் எளிய மக்களின் வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் 'பொன்னகரம்' ஆய்விற்குரிய பகுதியாக கொள்ளப்பெறுகிறது.

'Maslow's Hierarchy of Needs for Life and in Literature - Dr. Robert Sweetland, மாஸ்லோவின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்புத் தேவை நோக்கில் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள்- சத்தியா சின்னையா போன்ற கட்டுரைகள்' இக்கட்டுரைகள் இவ்வாய்விற்கான முன்னோடிகளாகக் கருதப்பெற்று புதுமைப்பித்தனின் பொன்னகரம் மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டோடு ஒப்பிட்டு ஆராயப் பெறுகிறது.

## பொன்னகரம் - கதைச் சுருக்கம்

புதுமைப்பித்தனின், 'பொன்னகரம்' சிறுகதையானது 1934ம் ஆண்டு மணிக்கொடி இதழில் வெளிவந்தது. இது அன்றைய மதராஸ் பற்றியது. இரண்டு பக்கங்களுக்குள்ளான இச்சிறுகதையின் கதாநாயகி 'அம்மாளு'. எனினும், அவளது கதாபாத்திர அறிமுகமே இறுதி அரைப்பக்கங்களுக்குள்ளே நிகழ்கிறது. அதற்கு முன்னதாக அவளது வாழ்க்கை நிலையினை உணர்த்தும் வகையில் அவளது வாழிட விளக்குமும் அங்குள்ளோரின் வாழ்க்கைமுறையும் விளக்கப்பட்டுள்ளது. அதுவே பொன்னகரம்.

இரயில் பாதையை ஒட்டி அமைந்திருக்கும் ஏழைகளின் குடியிருப்புப் பகுதியே இப்பொன் நகரம். இங்கு வசிப்பவர்களின் அன்றாட வாழ்க்கையே போராட்டம்தான். அவர்களது வாழிடம் வசிப்பதற்கான அடிப்படைத் தேவைகளே அற்றவை. அங்குள்ள குழந்தைகள் உணவிற்கும் விளையாட்டிற்குமே ஏங்கி நிற்பனவாய் காட்டப்பட்டுள்ளது. இம்மக்களின் இரவுநேர வாழ்க்கையும் கணவனை இழந்த பெண்களின் நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

கதாநாயகியான, அம்மாளு ஒரு மில்கூலி, அவள் கணவன் முருகேசன் சொந்தமாக ஓட்கா(குதிரை வண்டி) வைத்திருப்பவன். அம்மாளு, முருகேசன், அவனது தாயர், அவனது தம்பி, குதிரையென மொத்தம் ஐந்து பேர் கொண்ட குடும்பம் அவர்களுடையது. சாப்பாட்டுச் செலவும் மற்ற தேவைகளும் அம்மாளு மற்றும் முருகேசனின் வருமானத்தில்தான். ஒருநாள் முருகேசனும் அவனது குதிரையும் மது அருந்திவிட்டு ரேஷ் விட்டதில் வண்டி கவிழ்ந்து இருவருக்கும் அடிபட்டது. அம்மாளு, அடிபட்ட முருகேசனின் வீக்கத்திற்கு எதையோ அரைத்துப் பூசினாள். முருகேசன் அவளிடம் பால்கஞ்சி வேண்டுமென்று கேட்டான். காயம்பட்டு படுக்கையில் உள்ள தன் கணவன் விருப்பத்தை நிறைவேற்ற, தன்மீது ரொம்ப நாளாகக் கண் வைத்திருந்தவனுடன் இருளில் மறைந்து முக்கால் ரூபாய் சம்பாதிக்கிறாள். என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான், ஐயா, பொன்னகரம்! என்பதாய் கதை நிறைவடைகிறது.

## பொன்னகரத்தில் உடலியல் தேவைகள்

மாஸ்லோவின் கருத்துப்படி காற்று, உணவு, நீர், தூக்கம், வெப்பநிலை, அரவணைப்பு, உடலுறவு போன்றவற்றை உள்ளடக்கிய இவ்வுடலியல் தேவைகளே தேவைகளின் தொடக்கமாகவும், மனிதனது தேவைகளில் மிக முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. இவற்றுள் நீர் மற்றும் உணவுத் தேவையின் முக்கியத்துவத்தை பொன்னகரம் சுட்டிநிற்கிறது.

"தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன". "அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்". "அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்". "எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது" என்பனவாய், தண்ணீர் பல்வேறு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

தண்ணீர் குழாய்களின் இருப்பினைக் கேள்விக்குள்ளாக்குவதும், அதை அடைவது பெரும் கடினமான விடயம் எனினும் அதனை அடைவதற்கான உந்துதல் அதிகமாக இருப்பதை,'... பாரதப் போர்', '.ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது' போன்ற வரிகளின் வழி உணர முடிகிறது. இவ்வாறாக நீர் என்பது பொன்னகரம் வாழ் மக்களின் முக்கியத் தேவைகளுள் ஒன்றான, நீரின் அவசியம் என்பது உணர்த்தப்படுகிறது.

"டல் ஸீஸ'னில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒரு நாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!", "பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார

வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்." "அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்!" இவ்வாறாக, இரண்டு பக்கங்களிலான இச்சிறுகதையில் 'பசி', 'உணவு' குறித்த உரையாடல் பரவலாக காணப்படுகிறது. பசிக் கொடுமை சுட்டுதலும் சாக்கடையில் வரும் பழங்களைக்கூட எடுத்துண்பதும், உடல்நலமற்ற சூழலிலும் உணவு வேண்டலும் உடலியல் தேவையான உணவின் இன்றியமையாத்தன்மையை வெளிக்காட்டுகிறது. "பசியினை உடைய ஒருவர், உணவினையே தேவையாகக் கொண்டிருப்பார். அதனையே தேடவும் செய்வார்" என்ற மாஸ்லோவின் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது (Maslow, 1943).

## பொன்னகரத்தில் பாதுகாப்புத் தேவைகள்

உடல்சார் பாதுகாப்பு (Physical Safety) மற்றும் பொருள்சார் பாதுகாப்பு (Financial Safety) என்பதாய் வகைப்படுத்தும் பாதுகாப்புத் தேவைக்கான கூறுகளாக உறைவிடம், உடை, உடல்நலம், பாதுகாப்பான சுற்றுச்சூழல், வேலை முதலியன காட்டப்படுகின்றன. பொன்னகரத்தில், உடல்சார் பாதுகாப்புத் தேவைகளான உறைவிடம், உடல்நலம் முதலியனவும் பொருள்சார் பாதுகாப்புத் தேவையான வேலையும் இடம்பெறுகிறது.

"இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' - அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம். மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் - ஆமாம், வசிப்பதற்குத்தான்!" என்பதாக, பொன்னகரத்தின் முறையற்ற வாழிடச் சூழலை விளக்குவதன் வழி மனித வாழ்விற்கு உறைவிடத்தின் அவசியம் உணர்த்தப்படுகிறது.

"ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக் கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, 'கிளாக்ஸோ' 'மெல்லின்ஸ் பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க?" என்பதில், உயிர் பாதுகாப்பிற்காக போடப்பட்டுள்ள வேலியினைக் குறித்து அறிய முடிகிறது.

"இள வயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள் - விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப் படுகின்றன!", "இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான்", என்பனவற்றுள் வரும் ஆரோக்கியம் பற்றியக் குறிப்புகளும் காயத்திற்கு மருந்திடும் செயலும் மாஸ்லோவின் உடல்சார் பாதுகாப்புத் தேவைக்கு உதாரணங்களாகின்றன. "அம்மாளு ஒரு மில் கூலி".

"இருவருடைய வரும் படியில்தான், இவர்கள் சாப்பாடு", "அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?" "அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!" என்பனவாய், பொருளின் அவசியத்தையும் உடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்ய பொருள்சார் பாதுகாப்பு அடிப்படையாக அமைவதையும் அறியமுடிகிறது.

## பொன்னகரத்தில் அன்புத் தேவைகள்

எல்லா மனிதர்களும் அன்பு செலுத்தவும், செலுத்தப்படவும் விரும்புகிறார்கள். மனிதன் குழுக்களாகவும் குடும்பங்களாகவும் இணைந்து வாழ்வதற்கு அடிப்படையான அன்புத்தேவைகள் நட்பு, காதல் இணைப்பு, உறவு, பாசத்தை பெறுதல் மற்றும் கொடுத்தல் முதலிய கூறுகளைக் கொண்டுள்ளன.

பொன்னகரத்தில் குடும்பம் என்ற அமைப்பிலான அன்புத் தேவையே இக்கதையினைக் கட்டமைத்துள்ளது.

“அம்மாளு, முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை - ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு - (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்', முருகேசன் தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள் தான்.” என்பதாய், தனது வருமானத்தினையும் குடும்பம் என்ற அமைப்பிற்காய் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

“இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!” என்பதாய், அம்மாளு தன் விருப்பமற்ற கூடுகையினை குடும்பத்திற்காகத் தேர்வுசெய்கிறாள். இவ்வகையிலான, நிகழ்வுகள் அன்பு கொடுக்கப்பட வேண்டும் என்ற மாஸ்லோவின் மூன்றாம் படிநிலைக்குச் சான்றாதாரங்களாகின்றன.

## பொன்னகரத்தில் மதிப்புத் தேவைகள்

சுயமதிப்புத் தேவை, பிறரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் மதிப்புத் தேவை என்ற இரு வகைகளுள் உடல் வலிமை, போதுமைத்தன்மை, உலகினை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை, சுயமரியாதை, சுய தேர்ச்சி, சுதந்திரம் முதலியன சுயமதிப்புத் தேவைகளாகவும், நற்பெயர், சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கப்படல், உடைமை, புகழ், அங்கீகாரம் முதலியன பிறரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மதிப்புத் தேவைகளாகவும் கொள்ளப்படுகின்றன.

“புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான் சொந்த வண்டிதான்” என்பதாய் சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கப்பட தனக்கென சில உடைமைகளை வைத்திருக்க வேண்டும் என்ற உடைமைத் தேவை சுட்டப்பட்டுள்ளது.

மேலும், பொன்னகரத்தில் இம்மையின் பயனை யாரிடத்து வேண்டுமெனினும் பெறலாம் என்பது, “ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது” என்ற வரிகளின் வழி பெறப்படுகிறது. இச்சூழலிலும்கூட, “சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்” என்பதாய், அம்மாளு சுயமதிப்பைத் தக்கவைப்பவளாய் வெகுநாட்களாய் தன்னை நோட்டமிட்ட ஒருவனுக்கு இசைவு தெரிவிக்கா நிலையினைக் காணமுடிகிறது.

## பொன்னகரத்தில் தன்னிறைவுத் தேவைகள்

மனிதன் முழுத்திறனையும் பயன்படுத்தி எதை அடைய முடியுமோ, எவ்வாறு இருக்க முடியுமோ அதுவே அவனுக்கான தன்னிறைவு இதனை வழிகோலுவதாக, “எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும்” என்பதே இப்பொன்னகரத்திலுள்ள அனைவருக்குமான தன்னிறைவுத் தேவையாக அமைகிறது.

“Individual is doing what he is fitted for” என்பதாய் தன்னிறைவுத் தேவையினை அடைவதற்கான உந்துதல் ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டதாக அமையும் (Maslow, 1943). உதாரணமாக, “சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்” என அம்மாளுவினை அடைவது ஒரு நபரின் தன்னிறைவாகவும், “இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்! என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!” என்பதாய் தன் கணவனுக்காய் சுயமதிப்பு இழந்து, அதுவரை அவள் காத்துவந்த குடும்ப அமைப்பை பேணுதல் என்ற வகையில் தன்னிறைவு அடைகிறாள். இதனை வலியுறுத்துவதாக,” கணவனின் உயிரைக் காப்பதற்காக மற்றொருவனுடன் கூடுகிறாள் அம்மாளு. “பெண்மை என்றும் தூய்மையானது தன் மனதளவில் தூய்மையோடு நடந்து கொள்கிறாள் அம்மாளு” என்ற இராஜலட்சுமியின் கருத்து அமைகிறது.

## முடிவுரை

மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவே உந்தப்படுகின்றான் என்ற மாஸ்லோவின் படிநிலைத்தேவைக் கோட்பாட்டின் அடிப்படையினை "பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான், அவைகளும் அவனைக் கொன்றன, அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்திசெய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை, அதற்கென்ன?" என்ற பொன்னகரகம் சிறுகதை வரிகளுக்குள்ளேயே அடையாளம் காண முடிகிறது. இச்சிறுகதையில் நீர், உணவு போன்ற உடலியல் தேவைகளும் உறைவிடம், உடல்நலம் போன்ற உடல்சார் பாதுகாப்புத் தேவைகளும், வேலை, பொருளீட்டல் முதலிய பொருள்சார் பாதுகாப்புத் தேவைகளும் சுட்டி விளக்கப்பட்டுள்ளன. மேலும், குடும்ப அமைப்பின் வழி அன்புத் தேவையும், உடமை மற்றும் சுயமதிப்பின் வழி மதிப்புத் தேவைகளும் விளக்கப்பட்டுள்ளன. ஒருவருக்கொருவர் மாறுபடும் தன்னிறைவுத் தன்மையினை இருவேறு கதாபாத்திரங்கள் வழி விளக்கி, தன்னிறைவினை அடைய சுயமதிப்பினை இழக்கும் அம்மாளுவின் நிலை ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒருவரின் மேல்நிலைத் தேவைகள் மற்றவருக்கு அடிப்படைத் தேவையாவதும், ஆண், பெண் பேதங்கள் அவர்களுக்கான தேவைகளுக்குள் திணிக்கப்பட்டிருப்பதும், ஒரு தனிநபருக்கும், கூட்டு சமூகத்திற்கும் இடையிலான ஒருவரின் வார்ப்பிலிருந்து எழும் கலாசார வேறுபாடுகளும் சூழ்நிலை அடிப்படையில் தேவைகளின் வரிசைமுறை மாறுவதையும், கணக்கில் கொண்டு மாஸ்லோவின் படிநிலைத் தேவைக் கோட்பாடு மார்க்சிய, பெண்ணிய, சமூக, சூழலியல் அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

## References


Kendra Cherry (2022) Maslow's Hierarchy of Needs, verywell mind, https://www.verywellmind.com/what-is-maslows-hierarchy-of-needs-4136760

Kenrick, D.T., Neuberg, S.L., Griskevicius, V., Becker, D.V., & Schaller, M. (2010) Goal-Driven Cognition and Functional Behavior: The Fundamental-Motives Framework, Current Directions in Psychological Science, 19(1), 63–67. https://doi.org/10.1177/0963721409359281

Mahir, ILM. (2018) Maslow's Need Theory in Education: A Psychological Perspective, Bodhi International Journal of Research in Humanities, Arts and Science, 2(2) 264-269.

Maslow, A.H. (1943) A theory of human motivation, Psychological Review, 50(4), 370–396. https://doi.org/10.1037/h0054346

Maslow, A.H. (1954) Motivation and personality, Harpers, New York, India

Vallikkannan, (2012) Pudhumaipithan, Sahitya Akademi, New Delhi, India



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author's have no conflict of interest to declare that they are relevant to the content of this article.


### About the License

© The Author(s) 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

A. Godwin Sudharsan, S. Ravi, Maslow's Hierarchy of Needs in Ponnagaram, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 2 (2023) 18-25. DOI: https://doi.org/10.54392/ijmrd2323